**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கமுதி.**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**குற்றவியல் நடுவர். கமுதி**
**2026 ம் வருடம் ஜூன் திங்கள் 04 ம் நாள் வியாழக்கிழமை**
குற்றவியல் பல்வகை மனு எண். 179/2026

1. முத்துப்பாண்டி (44/26),
த/பெ. ராமர்.
மேலத்தெரு, K.M. கோட்டை,
கமுதி தாலுகா.

2. மோகனபெருமாள் (37/26),
த/பெ. ராஜ்,
K.M. கோட்டை,
கமுதி தாலுகா. ... மனுதாரர்கள்/எதிரிகள்

//எதிராக//

தமிழக அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
கமுதி காவல் நிலையம்,
இராமநாதபுரம் மாவட்டம்
குற்ற எண். 123/2026
U/s.118(1), 126(2), 296(பி), 351(3)of BNS ... எதிர்மனுதாரர்
/குற்றமுறையிடுபவர்.

இம்மனுவானது மனுதாரர்கள்/எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. முத்திருளப்பன், B.A., B.L., அவர்களும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை – 1 திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி அவர்களும் முன்னிலையாகி வாதிட்டதின் பேரில் இரு தரப்பு வாதங்களையும் உரிய கவனத்துடன் கேட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்......

**உத்தரவு**

மனுதாரர்கள்/எதிரிகள் தரப்பில் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹீதா பிரிவு 480 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.04 17:20:19 +0530

1. மனுதாரர்கள் வழக்கறிஞர் வாதம் கேட்கப்பட்டது. அவர் தன்னுடைய வாதத்தில் மனுதாரர்கள் மீது 118(1), 126(2), 296(பி), 351(3)of BNS பிரிவின் படி குற்றமுறையிடுவோரால் 25.05.2026 ம் தேதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டதாகவும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றும், பொய்யான தகவலின் புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரிகள் எந்தவித குற்றமும் செய்யாத நிரபராதி என்றும், சட்டத்தை மதித்து நடக்கக்கூடியவர்கள் என்றும், எதிரிகள் எங்கும் தப்பிச் செல்லமாட்டார்கள் என்றும், நீதிமன்ற உத்தரவுகளை ஏற்று நடப்பார்கள் என்றும், எதிரிகள் அவர்களது பிணைக்கு தகுந்த பிணையம் அளிக்க தயாராக உள்ளார்கள் என்று எதிரிகளை பிணையில் விடக்கோரி மனு தாக்கல் செய்து மனுதாரர்கள்/எதிரிகளை பிணையில் விடும்படியும் கோரினார்.

2. காவல் துறையினர் பதில் மனுவில் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட 3 வது எதிரியை கைது செய்ய வேண்டியுள்ளதாலும், வழக்கின் வாதி ராமர் என்பவர் இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து வருவதாலும், எதிரிகளை பிணையில் விடுவித்தால் வாதியிடம் பிரச்சனை செய்ய வாய்ப்புள்ளது என்பதாலும், எதிரிகளை பிணையில் விடுவித்தால எதிரிகளும், மற்ற நபர்களும் இதனை சாதாரண குற்றமாக நினைத்து இது போன்ற குற்ற செயல்களில் ஈடுபட வாய்ப்புள்ளது என்பதாலும், எதிரிகளை பிணையில் விடுவித்தால் தலைமறைவாகி வழக்கு விசாரணையை தாமதப்படுத்தக் கூடும் என்று எதிரிகளை பிணையில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவித்துள்ளார். கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரும் இதே கருத்தை தெரிவித்துள்ளார்.

3. மனு, பதில் மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் மனுதாரர்கள் கடந்த 25.05.2026 ம் தேதி முதல் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு 11 நாட்களாக சிறைவாசம் அனுபவித்து வருகிறார்

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.04 17:20:28 +0530

என்பதாலும், ஆவணங்களை பரிசீலித்ததில், வழக்கில் பாதிக்கப்பட்ட நபர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து வருகிறார் என்று அரசுத் தரப்பில் கூறியுள்ள போதிலும் ஆவணங்களின் படி அவருக்கு சுண்டுவிரல், வலது தொடை மட்டுமே காயம் உள்ளது என இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. மேலும், எதிரிகளுக்கு வேறு முன் குற்ற வழக்குகள் ஏதும் இல்லாத நிலையில் அவர்கள் சிறையில் இருந்த நாட்களை கருத்தில் கொண்டும், இந்நிலையில் எதிரியை பிணையில் விடுவதால் வழக்கின் புலனாய்வுக்கு எவ்வித குந்தகமும் ஏற்படாது என இந்நீதிமன்றம் கருதுவதால் மனுதாரருக்கு கீழ்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு பிணையம் வழங்கி இந்த நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:–</u>

1. எதிரியின் இரு ஜாமீன்தாரர்களும் தலா ரூ.10,000/–த்திற்கு பிணைப்பத்திரம் எழுதித்தர வேண்டும்.

2. எதிரி/மனுதாரர் பிணையில் விடப்பட்ட நாளிலிருந்து தினமும் காலை 10.00 மணிக்கு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில், ஆஜராகி 20 நாட்கள் கையொப்பம் இடவேண்டும்.

3. இதுபோன்ற குற்ற செயல்களில் மீண்டும் மனுதாரர் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனை பேரிலும்.

4. சாட்சிகளை கலைக்க எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளக்கூடாது. விசாரணை காலத்தில் ஒத்துழைக்க வேண்டும்.

5. நீதிமன்றத்தில் விசாரணைக்காக தவறாமல் ஆஜராக வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு (04.06.2026) இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.04 17:20:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.